අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
**OFFICE ON MISSING PERSONS**

---

**ஊடக வெளியீடு** **08 ஒக்டோபர் 2018**

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம், மேல் மகாணத்தின கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தாரோடான தங்கள் சந்திப்பை, அக்டோபர் 16ம் திகதி, செவ்வாய்க்கிழமையன்று நடத்தவுள்ளது. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் 2018ம் ஆண்டு பெப்ரவரியில் காணாமற்போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் ஆகியோர் நிலையறிதலுக்கும் அவர்கள் எங்கிருக்கின்றனர் என அறிவதற்குமான காணாமற்போனோர் சட்டவாக்கத்தின் அடிப்படையில் காணாமற்போனோர் அல்லது காணாமல் ஆக்கப்ட்டோர் ஆகியவர்களினதும் அவர்தம் குடும்பத்தினரதும் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்க நிறுவப்பட்டது. கா. போ. அ. தனது தொடர்பாடல் நிகழ்வுகளை 2018ம் ஆண்டு மே மாதம் மன்னார், மாத்தறை, முல்லைத்தீவு, திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, ஆகிய மாவட்டங்களில் நடத்தியது. எதிர்வரும் வாரங்களில் இதனை இதர மாவட்டங்களிலும் நடத்தவுள்ளது.

கா. போ. ஆ. அலுவலகத்தின் ஏழு ஆணையாளர்களும் காணாமற்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட நபர்களின் குடும்பத்தார், சிவில் சமூக உறுப்பினர்கள், ஆர்வலர்கள், ஊடகவியலாளர், அரச உத்தியோகத்தர் ஆகியோருடன் கா. போ. ஆ. அலுவலகத்தின் அமைப்பாண்மையையும் உபாய முறைமைகளையும் பற்றிய கருத்துக்களை பகிர்ந்து கொள்வர். இச் சந்திப்புக்களினூடாக கா. போ. ஆ. அலுவலகத்திற்கு பொது மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளும் வாய்ப்புக்கள் கிட்டுவதோடு, அவ்வாலோசனைகளை தம் கட்டமைப்பிலும் செயற்பாடுகளிலும் உள்ளடக்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

கொழும்பில் நடைபெறவுள்ள இச்சந்திப்பானது இல. 24 ஹோர்டன் பிளேஸ் முகவரியிலுள்ள சர்வதேச தொடர்புகளுக்கும் உபாய ஆய்வுகளுக்குமான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் (லைட் ஹவுஸ்) பி.ப. 3.30 மணிக்கு ஆரம்பமாகும்.